# இனப்பாகுபாட்டிற்கு எதிரான தேசியத் திட்டம்

## இந்தத் திட்டத்தைப் பற்றி

2011ஆம் ஆண்டில் ஆஸ்திரேலிய அரசாங்கம் இனப்பாகுபாட்டிற்கு எதிரான ஒரு தேசியத் திட்டத்தை உருவாக்குவதற்கு உறுதி அளித்தது.

இந்த இனப்பாகுபாட்டிற்கு எதிரான தேசியத் திட்டத்தின் நோக்கமானது:

ஆஸ்திரேலிய மக்களிடம் இனப்பாகுபாடு என்றால் என்ன, அதை எவ்வாறு தடுக்க முடியும் மற்றும் குறைக்க முடியும் என்பது பற்றிய ஒரு தெளிவான புரிந்துணர்வை வளர்ப்பது.

இத்திட்டத்தின் நோக்கங்களாவன:

- இனப்பாகுபாடு பற்றியும் அது ஒரு தனிநபரையும் ஒட்டுமொத்த சமுதாயத்தையும் எவ்வாறு பாதிக்கிறது என்பது பற்றியும் விழிப்புணர்வை உருவாக்குவது
- இனப்பாகுபாட்டைத் தடுக்க மற்றும் குறைக்க சிறந்த நடைமுறைகளை அடையாளம் கண்டு, அவற்றை வளர்த்து, கட்டமைத்தல்
- இனப்பாகுபாட்டைத் தடுக்க மற்றும் குறைக்க சமூகத்திற்கும் தனிநபர்களுக்கும் அதிகாரம் அளித்து, இனப்பாகுபாடு ஏற்படும் பொழுது அதைக் குறைக்க உதவுதல்

ஆஸ்திரேலிய மனித உரிமை ஆணையத்தின் இனப்பாகுபாடு ஒழிப்பு ஆணையர் தலைமையில் கூட்டுப் பங்காண்மை மூலம் ஒரு புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் உள்ள மற்ற பங்காளர்கள் பின்வருமாறு: குடிவரவு துறை குடியுரிமைத் துறை, அட்டார்னி ஜெனரல் துறை, குடும்பங்கள், வீட்டுவசதி, சமுதாயச் சேவைகள் மற்றும் உள்நாட்டு விவகாரங்கள் துறை, ஆஸ்திரேலிய பன்முகக் கலாச்சார மன்றம், ஆஸ்திரேலியாவின் மூத்த குடிமக்களின் தேசிய காங்கிரஸ் மற்றும் ஆஸ்திரேலியாவின் இனம்சார்ந்த சமுதாய மன்றங்களின் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகள்.

இந்தத் திட்டம் ஜூலை 2012க்கும் ஜூன் 2015க்கும் இடையில் செயல்படுத்தப்படும். இது பொதுமக்களுக்கான விழிப்புணர்வு, கல்வி ஆதாரங்கள் மற்றும் இளைஞர்களை ஈடுபடுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

## இனப்பாகுபாடு என்றால் என்ன?

இனப்பாகுபாடு பல வடிவங்களில் இருக்கும். அது நகைச்சுவை அல்லது வருத்தப்பட வைக்கும் கருத்துக்கள், கேலி செய்தல் அல்லது திட்டுதல்; துன்புறுத்தல் அல்லது அச்சுறுத்தல் அல்லது ஊடகம் வழியாக அல்லது இணைய தளத்தில் சில குறிப்பிட்ட குழுக்களின் மீது விரோதப் போக்கை வளர்க்கும் கருத்துக்களைக் கூறுதல். இனப்பாகுபாட்டின் காரணமாக உடல்ரீதியான துன்புறுத்தல்கள் மற்றும் வன்முறைகள் ஏற்படலாம்.

சேவைகளை அணுகுவதில் அல்லது பணிகளில் பங்கேற்பதில், கல்வி, விளையாட்டு மற்றும் சமூக நடவடிக்கைகளில் ஒரு குறிப்பிட்ட இன மக்களை விலக்கி வைத்தல் இனப்பாகுபாடாகும். ஒரு நிறுவன அளவில் அதன் கொள்கைகள் மூலமாகவோ அல்லது சில குழுக்களுக்கு பயன் அளிக்காத நடைமுறைகள் மூலமாகவோ இது நிகழலாம்.

இனப்பாகுபாடு பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் ஒரே மாதிரியாக சம வாய்ப்புகளையும், வளங்கள் அல்லது அதிகாரங்களையும் அணுக முடியாத சூழலை ஏற்படுத்தும். ஒரு குறிப்பிட்ட இனம் தாழ்வானது அல்லது உயர்வானது என்ற நம்பிக்கை சில நேரங்களில் இந்த சமமின்மையை நியாயப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது.

## ஆஸ்திரேலியாவில் இனப்பாகுபாட்டிற்கு ஆளாவது யார்?

இனப்பாகுபாடு நடத்தைகளான கேலி செய்தல் மற்றும் திட்டுதல் போன்றவை எந்த ஒரு இனக் குழுக்களுக்கு இடையிலேயும் ஏற்படலாம். இருந்தாலும், ஆஸ்திரேலியாவில் குறிப்பிட்ட சில மக்கள் இனவெறி மற்றும் பாகுபாட்டினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அதிலும் குறிப்பாக பழங்குடியினர் மற்றும் டொரெஸ் நீரிணைத் தீவுகளின் மக்களும் இனம்சார்ந்த மற்றும் கலாச்சாரம்சார்ந்த சிறுபான்மையினரும் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். ஒரு சில மதக் குழுக்களின் உறுப்பினர்களும் அவர்களின் இனம் மற்றும் கலாச்சாரம் காரணமாக இனப்பாகுபாட்டை அனுபவிக்கின்றனர்.

## சமூகம் சொல்வதைக் கேட்டல்

நாங்கள் ஆஸ்திரேலியா முழுவதிலும் உள்ள மக்களிடம் மார்ச்சுக்கும் மே 2012க்கும் இடையில் பேசினோம்.

- ஏறக்குறைய 700 பேர் 23 ஆலோசனைக் கூட்டங்களில் பங்கு கொண்டனர்.
- நாங்கள் 1500க்கும் மேலான மின்னணுக் கருத்தாய்வுகளையும் 200 சமர்ப்பித்தல்களையும் பெற்றிருக்கிறோம்.

நாங்கள் பெற்றதில் முக்கியமான செய்தி என்னவென்றால், இனவெறிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது மிகவும் முக்கியம் என்பதாகும்.

அவற்றில், நாம் முன்னுரிமை அளித்து பணியாற்ற வேண்டிய பகுதிகள் குறித்து அனைவரும் பொதுவாக ஒப்புக் கொண்டவை பின்வருமாறு:

- பணியிடங்கள்
- ஊடகம்
- பள்ளிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள்
- அரசாங்கச் சேவைகள்
- இணையதளம் மற்றும்
- விளையாட்டு

## இனவெறி – அது நம்மோடு நின்றுவிடட்டும்

இந்தத் திட்டம் அனைத்து ஆஸ்திரேலிய சமூக உறுப்பினர்களையும் இனவெறியை நிறுத்தும் நோக்கில் செயல்படுவதற்காக அழைக்கிறது. இனவெறியானது தனிநபர்கள் மற்றும் ஒரு குழுவாக நாம் எடுக்கும் நடவடிக்கைகள் காரணமாக முடிவுக்கு வந்துவிடும்.

## நாம் என்ன செய்யலாம்?

*இனவெறியைப் பற்றியும் தனிநபர் மற்றும் சமூகத்தின் மீதான அதன் விளைவுகளைப் பற்றியும் விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.*

- இனவெறியைப் பற்றிய பொது விழிப்புணர்வை உருவாக்குவதற்காகவும், நாம் அதற்காக என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றியும் விளக்குவதற்காக ஒரு செயல்திட்டத்தை தொடங்க வேண்டும்.
- இந்தத் திட்டத்தையும் அதன் செயல்பாடுகளையும் வளர்க்கும் தலைவர்களுடன் இணைந்து பணிபுரிய வேண்டும்.
- இனவெறியின் தாக்கத்தைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக அது குறித்த ஆராய்ச்சியை ஊக்குவிக்க வேண்டும்.

*இனவெறியைத் தடுக்க சிறந்த எடுக்காட்டுகளை உருவாக்குதல்*

- ஆஸ்திரேலியாவின் அனைத்து இன மற்றும் கலாச்சார பீன்னணியில் உள்ள மக்களிடத்தில் மரியாதையையும், ஒற்றுமையையும் வளர்க்கும் கொள்கைகளையும் சட்டங்களையும் ஆதரித்தல்.
- இளைஞர்களை மையமாகக் கொண்டு இனவெறியைப் பற்றிய சிறந்த கல்வி ஆதாரங்கள் உள்ள ஒரு இணையதளத்தை உருவாக்குதல்
- இனவெறியை தீர்ப்பதற்காகப் பணியாற்றும் முன்னுரிமைப் பகுதிகளில் உள்ள நிறுவனங்களோடு பணியாற்றி சிறந்த முயற்சிகளுக்கு ஆதரவு அளித்தல்
- தேசிய, மாநில மற்றும் உள்ளூர் நிலைகளில் உள்ள அரசாங்கம் மற்றும் அரசாங்கம் சாராத நிறுவனங்களுடன் தொடர்புகளை உருவாக்கிக் கொண்டு அந்நிறுவனங்களின் சிறந்த முயற்சிகளுக்கு ஆதரவளித்தல்

*தனிநபர்கள் மற்றும் சமூகங்களுக்கு இனவெறி பற்றிய தகவல்களையும் ஆதாரங்களையும் அணுகுவதற்கு வழிவகை செய்திட வேண்டும். இதன்மூலம் இனவெறியினால் அவர்கள் பாதிக்கப்படும் பொழுது தாங்கள் என்ன செய்ய வெண்டும் என்பது அவர்களுக்கு உறுதியாகத் தெரியும்.*

- அமைப்புகள் மற்றும் முறைமைகளில் உள்ள இனவெறிக்கு பதிலளிக்கும் வகையில் தனிநபர்கள், சமூகங்களுக்கு உதவும் வளஆதாரங்களை வளர்த்தல்
- இனவெறியின் ஆபத்து இருக்கும் பொழுது தனிநபர்களும் சமூகங்களும் எவ்வாறு சட்டப் பாதுகாப்பைப் பெறுவது என்ற தகவல்களை வழங்குதல்.

## திட்டத்தைச் செயல்படுத்துதல்

தேசிய இனவெறி எதிர்ப்புத் திட்டம் மூன்று ஆண்டுகளில் படிப்படியாக செயல்படுத்தப்படும்.

**ஜுலை 2012 லிருந்து:** நாங்கள் இனவெறியைப் பற்றிய ஒரு பொது விழிப்புணர்வு இயக்கத்தை தொடங்குவோம். நாங்கள் இனவெறி பற்றிய சமூக விழிப்புணர்வை உருவாக்குவதில் கவனம் செலுத்துவோம். இனவெறியினால் ஏற்படும் பொருளாதார மற்றும் சமூக பாதிப்புகளைப் பற்றிய ஆய்வுகளை உருவாக்குவோம். ஏற்கனவே இருக்கின்ற இனவெறியைக் குறைப்பதற்கான மற்றும் மரியாதை மற்றும் ஒற்றுமையை வளர்ப்பதற்கான முயற்சிகளுக்கு எவ்வாறு உதவ முடியும் என்பதை ஆராய்வோம்.

**ஜுலை 2013 முதல்:** நாங்கள் இனவெறி எதிர்ப்புக் கல்வி பற்றிய ஆதாரங்கள் உள்ள ஒரு இணைய தளத்தை உருவாக்குவோம். அதில் தனிநபர்களும் சமூகமும் இனவெறிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான சிறந்த ஆதாரங்களை சேகரிக்கத் தொடங்குவோம். அமைப்புகளிலும் முறைமைகளிலும் இனவெறியை குறைப்பதற்கான அணுகுமுறைகளை அடையாளம் காண்பதற்காக எங்களுடைய முன்னுரிமைப் பகுதிகளில் இருக்கும் நிறுவனங்களோடு பணிபுரியத் தொடங்குவோம்.

**ஜுலை 2014 முதல்:** நாங்கள் சேகரித்த மற்றும் உருவாக்கிய ஆதாரங்களைப் பயன்படுத்தி தனிநபர்கள் மற்றும் சமூகங்கள் இனவெறியை எதிர்கொள்ளும் விதமாக எங்களுடைய கூட்டாளிகளுடன் சேர்ந்து பணிபுரிவோம்.

இந்த மூன்று ஆண்டுகளின் முடிவில், இந்த தேசிய இனவெறி எதிர்ப்புத் திட்டம் மதிப்பிடப்படும்.

## இதில் தங்களை ஈடுபத்திக் கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்

தேசிய இனவெறி எதிர்ப்புத் திட்டச் செயலகம்
தொலைபேசி: 02 9284 9600 அல்லது 1800 620 241 (TTY)
மின்னஞ்சல்: antiracismsecretariat@humanrights.gov.au
இணையதளம்: www.humanrights.gov.au/antiracism
முகவரி: GPO Box 5218
SYDNEY NSW 2001

ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணைக்குழு இனவெறிப் பாகுபாட்டினால் பாதிக்கப்பட்ட மக்களிடம் இருந்து பெறப்படும் புகார்களின் மேல் நடவடிக்கை எடுக்கிறது.

இனப்பாகுபாடு மற்றும் உங்கள் உரிமைகள் குறித்த இலவச ஆலோசனை அல்லது ஒரு புகார் அளிப்பதற்கு ஆணையத்தின் புகார் தெரிவிக்கும் தொலைபேசி எண்களான கீழ்க்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும். **02 9284 9888**, **1300 656 419** (உள்ளூர் அழைப்பு) அல்லது **1800 620 241** (TTY).

ஒரு புகாரை அளிப்பது அல்லது ஒரு புகாருக்கு பதிலளிப்பது பற்றிய தகவல்கள் www.humanrights.gov.au என்ற இணையதளத்தில் கிடைக்கிறது.

complaintsinfo@humanrights.gov.au என்ற ஆணையத்தின் முகவரிக்கு நீங்கள் மின்னஞ்சலும் அனுப்பலாம்.